**OS. 22/2024**

**நாள். 25.11.2025**

**வா.சா.1 – சுப்ரமணியன்**

<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாவா கிரைய ஒப்பந்தம் எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தி எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தின் (வா.சா.ஆ.3) அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் என்னிடம் கிரையம் சம்மந்தமாக எந்த தொகையும் பெறவில்லை மற்றும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஒரு கதவு இலக்கத்திலும், 2, 3 பிரதிவாதிகள் மற்றொரு கதவிலக்கத்திலும் தனித்தனியாக வசித்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தனித்தனியாகத்தான் வசித்த வருகிறார்கள் என்றும் நான் வழக்கிற்காக ஒரே கதவிலக்கத்தில் வசிப்பதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகள் பணம் பெற்றுக்கொண்டதாக அடிக்கடி காவல் நிலையத்தில பொய்யாக புகார் கொடுத்து அழைக்களித்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அழைககளித்து வந்ததால் 2, 3 பிரதிவாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் எனக்கும், மாவட்ட குற்ற பிரிவு சார்பு ஆய்வாளருக்கும் 29.06.2022 தேதியிட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், அதை பெற்றுக்கொண்ட நான் தற்போது வழக்கிற்காக பெறவில்லை என பொய்யாக மறுத்து சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2, 3 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவர்கள் அவசிய தரப்பினர்கள் அல்ல என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள் என்னிடமிருந்த தாவா கிரைய ஒப்பந்தத்திற்காக எந்த பணமும் பெறவில்லை என்றும், அதனால் அவர்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.